# அறிவித்தல்

**<u>டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அறிவித்தல்</u>**

பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு,

நாட்டில் தற்போது நிலவும் டெங்கு நோய்ப் பரவல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழக சமூகத்தின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாக்க உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

அதன்படி, மருத்துவ நிபுணரால் **டெங்கு காய்ச்சல்** இருப்பது கண்டறியப்பட்ட அல்லது தற்போது **டெங்கு காய்ச்சலுக்கு** சிகிச்சை பெற்றுவரும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள், **பின்வரும் தகவல்களைப் பல்கலைக்கழகத்தின் பொது சுகாதார ஆய்வாளரிடம் கூடிய விரைவில் வழங்குமாறு** அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. மாணவர் / பணியாளரின் பெயர்:
2. மாணவர் / பணியாளரின் பதிவு இலக்கம் / பணியாளர் இலக்கம்:
3. பீடம் / பிரிவு / துறை:
4. தொடர்பு இலக்கம்:
5. தற்போதைய முகவரி:
    - வீடு
    - விடுதி
    - மருத்துவமனை

**பல்கலைக்கழக பொது சுகாதார ஆய்வாளர்களின் தொடர்பு விபரங்கள்**

பெயர் : திரு.எச்.டபிள்யூ.சி.கே. சில்வா / திரு.எச்.ஆர்.எல். சேனாதீர
தொடர்பு இலக்கம் : 071 537 1519 / 071 537 1510
வாட்ஸ்அப் இலக்கம் : 077 269 2131

மேலும், டெங்கு காய்ச்சலில் இருந்து குணமடைந்து, நீங்கள் கல்விசார் அல்லது அலுவலக பணிகளுக்குத் திரும்பியதும், தொடர்புடைய மருத்துவ அறிக்கைகள் மற்றும் நோயறிதல் பரிசோதனை அறிக்கைகளைப் பல்கலைக்கழகத்தின் பொது சுகாதார ஆய்வாளரிடம் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இவ்விடயத்தில் உங்கள் ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டப்படுகிறது, மேலும் அது பல்கலைக்கழக சமூகத்தின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

நன்றி

பதிவாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்